நெஞ்சக் கன கல்லு நெகிழ்ந்து உருகத்

தஞ்சத்து அருள் சண்முகனுக்கு இயல்சேர்

செஞ்சொற் புனை மாலை சிறந்திடவே

பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம்.

**… வேலும் மயிலும் சேவலும் துணை …( 6 முறை ஓதவும்)**

ஓலையுந் தூதருங் கண்டுதிண் டாட லொழித்தெனக்குக்

காலையு மாலையு முன்னிற்கு மேகந்த வேள்மருங்கிற்

சேலையுங் கட்டிய சீராவுங் கையிற் சிவந்தசெச்சை

மாலையுஞ் சேவற் பதாகையுந் தோகையும் வாகையுமே.

**… வேலும் மயிலும் சேவலும் துணை …( 6 முறை ஓதவும்)**

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள்
மெய்ம்மைகுன்றா

மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த

பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி

வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.

**… வேலும் மயிலும் சேவலும் துணை …( 6 முறை ஓதவும்)**

தேரணி யிட்டுப் புரம் எரித் தான்மகன் செங்கையில்வேற்

கூரணி யிட்டணு வாகிக் கிரௌஞ்சங் குலைந்தரக்கர்

நேரணி யிட்டு வளைந்த கடகம் நெளிந்து சூர்ப்

பேரணி கெட்டது தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே.

**… வேலும் மயிலும் சேவலும் துணை …( 6 முறை ஓதவும்)**

திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை

விருத்தன்என(து) உளத்தில்உறை

கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே.

**( … இந்த அடியை முதலில் 20 முறை ஓதவும் … )**

1. பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை

கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி

விழிக்குநிகர் ஆகும் … … … ( … திரு … )

2. திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை

விருத்தன்என(து) உளத்தில்உறை

கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே … … … ( … திரு … )

3. சொலற்(கு)அரிய திருப்புகழை உரைத்தவரை

அடுத்தபகை அறுத்(து)எறிய

உறுக்கிஎழும் அறத்தைநிலை காணும் … … … ( … திரு … )

4. தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி

தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை

கழற்குநிகர் ஆகும் … … … ( … திரு … )

5. பனைக்கைமுக படக்கரட மதத்தவள

கஜக்கடவுள் பதத்(து)இடு(ம்)நி

களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் … … … ( … திரு … )

6. சினத்(து)அவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு

குறைத்தலைகள் சிரித்(து)எயிறு

கடித்துவிழி விழித்(து)அலற மோதும் … … … ( … திரு … )

7. துதிக்கும்அடி யவர்க்(கு)ஒருவர் கெடுக்கஇடர்

நினைக்கின்அவர் குலத்தைமுதல் அறக்களையும்

எனக்(கு)ஓர் துணை ஆகும் … … … ( … திரு … )

8. தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண

வழைப்ப(து) என மலர்க்கமல கரத்தின்முனை

விதிர்க்கவளை(வு) ஆகும் … … … ( … திரு … )

9. பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு

கவிப்புலவன் இசைக்(கு)உருகி

வரைக்குகையை இடித்துவழி காணும் … … … ( … திரு … )

10. திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை

முளைத்த(து)என முகட்டின்இடை

பறக்கஅற விசைத்(து) அதிர ஓடும் … … … ( … திரு … )

11. சுடர்ப்பரிதி ஒளிப்பநில(வு) ஒழுக்கு(ம்)மதி

ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஒளிர்

ஒளிப்பிரபை வீசும் … … … ( … திரு … )

12. தனித்துவழி நடக்கும்என(து) இடத்தும்ஒரு

வலத்தும்இரு புறத்தும்அரு(கு)

அடுத்(து)இரவு பகற்றுணைய(து) ஆகும் … … … ( … திரு … )

13. பசித்(து)அலகை முசித்(து)அழுது முறைப்படுதல்

ஒழித்(து)அவுணர் உரத்(து)உதிர

நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் … … … ( … திரு … )

14. திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது

குடித்(து)உடையும் உடைப்(பு) அடைய

அடைத்(து)உதிரம் நிறைத்துவிளை யாடும் … … … ( …திரு …)

15. சுரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்)மக பதிக்கும்விதி

தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்

இடுக்கண்வினை சாடும் … … … ( … திரு … )

16. சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்

பெருத்தகுடர் சிவத்ததொடை

எனச்சிகையில் விருப்பமொடு சூடும் … … … ( … திரு … )

17. சுரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்)மக பதிக்கும்விதி

தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்

இடுக்கண்வினை சாடும் … … … ( … திரு … )

18. சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்

பெருத்தகுடர் சிவத்ததொடை

எனச்சிகையில் விருப்பமொடு சூடும் … … … ( … திரு … )

19. பசித்(து)அலகை முசித்(து)அழுது முறைப்படுதல்
ஒழித்(து)அவுணர் உரத்(து)உதிர
நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் ... ... ... ( ... திரு ... )

20. திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது
குடித்(து)உடையும் உடைப்(பு) அடைய
அடைத்(து)உதிரம் நிறைத்துவிளை யாடும் ... ... ... ( ... திரு .)

21. சுடர்ப்பரிதி ஒளிப்பநில(வு) ஒழுக்கு(ம்)மதி
ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஒளிர்
ஒளிப்பிரபை வீசும் ... ... ... ( ... திரு ... )

22. தனித்துவழி நடக்கும்என(து) இடத்தும்ஒரு
வலத்தும்இரு புறத்தும்அரு(கு)
அடுத்(து)இரவு பகற்றுணைய(து) ஆகும் ... ... ... ( ... திரு ... )

23. பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு
கவிப்புலவன் இசைக்(கு)உருகி
வரைக்குகையை இடித்துவழி காணும் ... ... ... ( ... திரு ... )

24. திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை
முளைத்த(து)என முகட்டின்இடை
பறக்கஅற விசைத்(து) அதிர ஓடும் ... ... ... ( ... திரு ... )

25. துதிக்கும்அடி யவர்க்(கு)ஒருவர் கெடுக்கஇடர்

நினைக்கின்அவர் குலத்தைமுதல் அறக்களையும்

எனக்(கு)ஓர் துணை ஆகும் … … … ( … திரு … )

26. தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண

வழைப்ப(து) என மலர்க்கமல கரத்தின்முனை

விதிர்க்கவளை(வு) ஆகும் … … … ( … திரு … )

27. பனைக்கைமுக படக்கரட மதத்தவள

கஜக்கடவுள் பதத்(து)இடு(ம்)நி

களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் … … … ( … திரு … )

28. சினத்(து)அவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு

குறைத்தலைகள் சிரித்(து)எயிறு

கடித்துவிழி விழித்(து)அலற மோதும் … … … ( … திரு … )

29. சொலற்(கு)அரிய திருப்புகழை உரைத்தவரை

அடுத்தபகை அறுத்(து)எறிய

உறுக்கிஎழும் அறத்தைநிலை காணும் … … … ( … திரு … )

30. தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி

தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை

கழற்குநிகர் ஆகும் … … … ( … திரு … )

31. பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை

கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி

விழிக்குநிகர் ஆகும் … … … ( … திரு … )

32. திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை

விருத்தன்என(து) உளத்தில்உறை

கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே … … … ( … திரு … )

33. தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி

தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை

கழற்குநிகர் ஆகும் … … … ( … திரு … )

34. சொலற்(கு)அரிய திருப்புகழை உரைத்தவரை

அடுத்தபகை அறுத்(து)எறிய

உறுக்கிஎழும் அறத்தைநிலை காணும் … … … ( … திரு … )

35. திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை

விருத்தன்என(து) உளத்தில்உறை

கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே … … … ( … திரு … )

36. பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை

கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி

விழிக்குநிகர் ஆகும் … … … ( … திரு … )

**37. தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண**

**வழைப்ப(து) என மலர்க்கமல கரத்தின்முனை**

**விதிர்க்கவளை(வு) ஆகும் … … … ( … திரு … )**

**38. துதிக்கும்அடி யவர்க்(கு)ஒருவர் கெடுக்கஇடர்**

**நினைக்கின்அவர் குலத்தைமுதல் அறக்களையும்**

**எனக்(கு)ஓர் துணை ஆகும் … … … ( … திரு … )**

**39. சினத்(து)அவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு**

**குறைத்தலைகள் சிரித்(து)எயிறு**

**கடித்துவிழி விழித்(து)அலற மோதும் … … … ( … திரு … )**

**40. பனைக்கைமுக படக்கரட மதத்தவள**

**கஜக்கடவுள் பதத்(து)இடு(ம்)நி**

**களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் … … … ( … திரு … )**

**41. தனித்துவழி நடக்கும்என(து) இடத்தும்ஒரு**

**வலத்தும்இரு புறத்தும்அரு(கு)**

**அடுத்(து)இரவு பகற்றுணைய(து) ஆகும் … … … ( … திரு … )**

**42. சுடர்ப்பரிதி ஒளிப்பநில(வு) ஒழுக்கு(ம்)மதி**

**ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஒளிர்**

**ஒளிப்பிரபை வீசும் … … … ( … திரு … )**

43. திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை

முளைத்த(து)என முகட்டின்இடை

பறக்கஅற விசைத்(து) அதிர ஓடும் … … … ( … திரு … )

44. பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு

கவிப்புலவன் இசைக்(கு)உருகி

வரைக்குகையை இடித்துவழி காணும் … … … ( … திரு … )

45. சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்

பெருத்தகுடர் சிவத்ததொடை

எனச்சிகையில் விருப்பமொடு சூடும் … … … ( … திரு … )

46. சுரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்)மக பதிக்கும்விதி

தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்

இடுக்கண்வினை சாடும் … … … ( … திரு … )

47. திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது

குடித்(து)உடையும் உடைப்(பு) அடைய

அடைத்(து)உதிரம் நிறைத்துவிளை யாடும் … … … ( … திரு .)

48. பசித்(து)அலகை முசித்(து)அழுது முறைப்படுதல்

ஒழித்(து)அவுணர் உரத்(து)உதிர

நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் … … … ( … திரு … )

49. திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது
குடித்(து)உடையும் உடைப்(பு) அடைய
அடைத்(து)உதிரம் நிறைத்துவிளை யாடும் ... ... ... ( ... திரு ).

50. பசித்(து)அலகை முசித்(து)அழுது முறைப்படுதல்
ஒழித்(து)அவுணர் உரத்(து)உதிர
நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் ... ... ... ( ... திரு ... )

51. சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை
எனச்சிகையில் விருப்பமொடு சூடும் ... ... ... ( ... திரு ... )

52. சுரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்)மக பதிக்கும்விதி
தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்
இடுக்கண்வினை சாடும் ... ... ... ( ... திரு ... )

53. திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை
முளைத்த(து)என முகட்டின்இடை
பறக்கஅற விசைத்(து) அதிர ஓடும் ... ... ... ( ... திரு ... )

54. பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு
கவிப்புலவன் இசைக்(கு)உருகி
வரைக்குகையை இடித்துவழி காணும் ... ... ... ( ... திரு ... )

55. தனித்துவழி நடக்கும்என(து) இடத்தும்ஒரு
வலத்தும்இரு புறத்தும்அரு(கு)
அடுத்(து)இரவு பகற்றுணைய(து) ஆகும் … … … ( … திரு … )

56. சுடர்ப்பரிதி ஒளிப்பநில(வு) ஒழுக்கு(ம்)மதி
ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஒளிர்
ஒளிப்பிரபை வீசும் … … … ( … திரு … )

57. சினத்(து)அவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்(து)எயிறு
கடித்துவிழி விழித்(து)அலற மோதும் … … … ( … திரு … )

58. பனைக்கைமுக படக்கரட மதத்தவள
கஜக்கடவுள் பதத்(து)இடு(ம்)நி
களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் … … … ( … திரு … )

59. தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண
வழைப்ப(து) என மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை(வு) ஆகும் … … … ( … திரு … )

60. துதிக்கும்அடி யவர்க்(கு)ஒருவர் கெடுக்கஇடர்
நினைக்கின்அவர் குலத்தைமுதல் அறக்களையும்
எனக்(கு)ஓர் துணை ஆகும் … … … ( … திரு … )

**61. திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை**

**விருத்தன்என(து) உளத்தில்உறை**

**கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே … … … ( … திரு … )**

**62. பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை**

**கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி**

**விழிக்குநிகர் ஆகும் … … … ( … திரு … )**

**63. தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி**

**தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை**

**கழற்குநிகர் ஆகும் … … … ( … திரு … )**

**64. சொலற்(கு)அரிய திருப்புகழை உரைத்தவரை**

**அடுத்தபகை அறுத்(து)எறிய**

**உறுக்கிஎழும் அறத்தைநிலை காணும் … … … ( … திரு … )**

**( … முடிவிலும் … திரு … இந்த அடியை 20 முறை ஓதவும் … )**

**வேலும் மயிலும் சேவலும் துணை…( 6 முறை ஓதவும்)**

தேரணி யிட்டுப் புரம் எரித் தான்மகன் செங்கையில்வேற்

கூரணி யிட்டணு வாகிக் கிரௌஞ்சங் குலைந்தரக்கர்

நேரணி யிட்டு வளைந்த கடகம் நெளிந்து சூர்ப்

பேரணி கெட்டது தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே.

**… வேலும் மயிலும் சேவலும் துணை …( 6 முறை ஓதவும்)**

சேய அன்பு உந்தி வன வாச மாதுடன் சேர்ந்த செந்தில்

சேய வம்பு உந்து இகல் நிசாசராந்தகா சேந்த என்னில்

சேயவன் புந்தி பனிப்பானு வெள்ளி பொன் செங்கதிரோன்

சேயவன் புந்தி தடுமாறவே வரும் சேதம் இன்றே.

**... வேலும் மயிலும் சேவலும் துணை ...( 6 முறை ஓதவும்)**

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்ட

தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி

குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்

தொளைத்தவேல் உண்டே துணை.

**... வேலும் மயிலும் சேவலும் துணை ...( 6 முறை ஓதவும்)**

சலங்காணும் வேந்தர்தமக்கு மஞ்சார் யமன் சண்டைக்கஞ்சார்

துலங்கா நரகக் குழியணு கார்துட்ட நோயணுகார்

கலங்கார் புலிக்குங் கரடிக்கும் யானைக்குங் கந்தனன்னூல்

அலங்கார நூற்று ளொருகவிதான்கற் றறிந்தவரே.

**... வேலும் மயிலும் சேவலும் துணை ...( 6 முறை ஓதவும்)**